RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s113

# தகனம் நாவலில் தலித் பெண்ணியம்

வெ. முத்துக்களஞ்சியம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பார்வதீஸ் கலை அறிவியல் கல்லூரி, திண்டுக்கல்-624002, தமிழ்நாடு, இந்தியா.

# Dalit feminism in cremation novel

V. Muthukkalanjiyam [a, *]

[a] Department of Tamil, Parvathy's Arts and Science College, Dindigul-624002, Tamil Nadu, India

* Corresponding Author: muthukalanchiyam93@gmail.com

Received: 04-11-2020
Revised: 31-05-2021
Accepted: 04-06-2021
Published: 11-06-2021

Check for updates

**ABSTRACT**

The word Dalit was a Marathi word in a common sense of oppressed people. Today, in the defined sense of the Depressed Classes, it is an all-India term and an ideology. It is a collective symbol of some of the Depressed Classes and a symbol of a cultural politics. In the Tamil context, dalit manifestations, events and its main functions have been high since the nineties. Dalit women are depressed in the grip of untouchability, denied basic rights on the basis of caste. The purpose of this article is to examine the lack of education of Dalit women in the cremation novel, the burning of corpses in the graveyard, the suffering they suffer from professionalism, the misery and difficulties suppressed by caste degradation.

**Keywords:** Dalit, Fundamental Rights, Caste, Profession, Problems

## முன்னுரை

தலித் என்ற சொல் ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற ஒரு பொதுவான பொருளில் மராட்டியச் சொல்லாக இருந்தது. இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற வரையறுத்த பொருளில் அகில இந்தியத் தன்மை பெற்ற சொல்லாகவும், ஒரு கருத்தியலாகவும் வழக்கேறியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட சிலசாதிகளின் ஒரு கூட்டுவடிவ இலச்சினையாகவும், ஒருபண்பாட்டு அரசியலின் அடையாளமாகவும் இருக்கின்றது. தமிழ்ச்சூழலில் தொண்ணூறுகளுக்குப் பிறகு தலித்திய வெளிப்பாடுகள், நிகழ்வுகள், அதன் முக்கியச் செயல்பாடுகள் அதிகமாக உள்ளன. தலித் பெண்கள்வர்க்கம், சாதீயம் என்ற அடிப்படையில் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டும் தீண்டாமையின் பிடியில் இறுக்குண்டும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கின்றனர். தகனம் நாவலில் தலித் பெண்கள் கல்வியில்லாததால், மயானத்தில் பிணம் எரிக்கின்ற நிலை, தொழில் முறையால் அவர்கள், அடையும் துன்பம், சாதி இழிவால் ஒடுக்கப்படும் அவலங்கள், சிக்கல்கள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## தலித் பெண்ணியம்

காலம்காலமாகத் தலித் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். தலித் பெண்களுக்குப் பலகொடுமைகளும் அவமானங்களும் நடந்து அடிமைப்படுத்தப்படுகின்றனர். தலித் மக்கள் கல்வியறிவு இல்லாததன் காரணமாக அடக்கப்பட்டு ஒடுக்கப்படுவதால் தலித் பெண்ணியம் பற்றிப் பேசவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. "பெண்ணியம் என்பது ஒடுக்கப்பட்ட ஒருபிரிவினரான பெண்களின் விடுதலைச்

சித்தாந்தம் என்கிறார் கெய்ல் ஓம்வெய்த்" (Idhayaventhan, 2002). தலித் இன மக்கள் சமுதாயத்தில் எந்த உரிமையுமில்லாமல் வாழ்கின்றனர். ஆனால், மற்ற இனங்களில் பெரும்பான்மையான பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்தாலும் உரிமைகள் கிடைக்கின்றன.

"தலித் இயக்கங்கள் பெண்ணிய இயக்கங்களோடு இணைந்து செயல்படுவதையும் காணமுடிகிறது. பெண்ணியமும் தலித்தியமும் ஒன்று மற்றொன்றின் நீட்சியாகவே உள்ளது என்கிறார் சுசிதாரு" (Raj Gauthaman, 2018)

தலித்பெண் என்றமுறையில் அவளுடைய பிரச்சனைகளிலும் இரண்டு பரிமாணங்கள் உண்டு. அவை "தலித்து என்ற முறையில், அடுத்துப்பெண் என்ற முறையில்" (Natarajan, 2012).பொதுவாகப் தலித்பெண் என்பவள் அடிமைப்பட்டு இருப்பதால் காலந்தோறும் தலித் பெண்களுக் கெதிரான வன்முறைகள் பலவடிவங்களில் வந்து கொண்டிருக்கின்றன. ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'தகனம் நாவல் தலித் பெண்களுக்குக் கல்வியறிவு இல்லாதாதால் உணவுக்காகவும் இருப்பிடத்திற்காகவும், உழைக்கும்போதும் உண்டாகும் பிரச்சனைகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றது என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Andal Priyadarshini, 2005).

## வாழ்விடம்

சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்துவரும் தாழ்த்தப்பட்டமக்கள் பல்வேறு சூழல்களில் ஏழ்மை, வறுமை என்ற நிலைக்கு உள்ளாகுகின்றனர். அவர்கள் மற்ற அதிகாரம் படைத்தவர்களைச் சார்ந்து வாழ வேண்டியநிலை இருக்கின்றது.

'பக்கத்திலிருந்த ஏரியைத் திறந்துவிட்டதில் குப்பம் அடையாளம் தெரியாமல் உருக்குலைந்துபோனது. குப்பத்தில் ஈ, காக்கா இல்லை. நல்ல நாளிலேயே அடுப்பெரிக்க வக்கில்லாதவர்கள் - இப்போது என்ன பண்ண?" என்ற பகுதி தலித் மக்களின் வாழ்விடம் குறித்து இழிவுபடுத்தி பேசுவதைக் குறிப்பிடுகின்றது (Andal Priyadarshini, 2005).

தாழ்த்தப்பட்ட பெண்கள் தெருக்களைச் சுத்தப்படுத்தும் தொழிலாளர்களாகவும், மயானத்தில் பிணம் எரிக்கும் வெட்டியான் தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர். குடிசையில் வாழ்தல், சாக்கடைகள் மூடி போடாததால் இறப்புகள் ஏற்படல், மழைபெய்து குடிசையை அடித்துச் செல்லுதல், சத்திரத்தில் தங்குதல், கிடைத்த உணவுகளை உண்ணுதல் போன்ற நிகழ்வுகளையும், இதனை அரசியலில் (கவுன்சிலர்) இருப்பவர்கள் கண்டுக்காத தன்மையையும் போன்றவற்றை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது.

'நம்மதொகுதி தாண்ண அது. மராமத்துசரியாப் பண்ணலேன்னு பிலுபிலுன்னு புடிச்சிக்கிட்டாளுங்க. நாளைக்கு எலும்புத் துண்டாட்டம் எதையாச்சும் தூக்கிப் போட்டாஎவளும் சட்டம் பேசமாட்டாளுக. அடுத்தஎலக்சனுலநெஞ்சநிமித்திட்டுப் போய் நிக்கலாம்.." இவ்வாறு அரசியலில் இருப்பவர்கள் தலித் பெண்களின் வாழ்விடத்தைப் பற்றி பேசுவதை அறிய முடிகின்றது (Andal Priyadarshini, 2005).

## உணவு

பொருளாதாரப் பிரச்சினை என்பது உலகளாவிய ஒன்று, துமக்கள் அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான பிரச்சினையாகும். சாதி, சனம், மேல், கீழ் என்னும் வேறுபாடுகளின்றி அனைத்து மக்களுக்கும் உரிய ஒன்றாக இ,து விளங்குகிறது. ஏழைகள் என்போர் அனைத்துச் சாதியிலும் வாழ்கின்றனர். உயர்சாதியினரில் வாழும் ஏழைகள் பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்தாலும் சாதி, அரசியல்செல்வாக்கு, சமூகமதிப்பு ஆகியவற்றின் வழி விழிப்புணர்வு பெற்றுத் தங்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

உணவு, உடை, உறைவிடமிருந்தும், வீதிகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்துவரும் தலித்துகளின் நிலை அவ்வாறில்லை. வறுமை, ஏழ்மை போன்ற பிரச்சினைகளே அவர்களுக்கு வாழ்க்கையாக

அமைகின்றன. பிறப்புமுதல் இறப்புவரை தலித் பெண்கள் அடிமைகளாகவும் சமூகப்பணி செய்பவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இந்நாவலில் ஒருவேளை உணவுக்காக இரவும் பகலும் சின்னப்பொண்ணு மயானத்தில் பிணத்தை எரித்துப் பிழைக்கும் தொழிலைச் செய்து வருகின்றாள். தினமும் உணவுக்காகப் பிணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கக் கூடிய அவல நிலையை நாவல் எடுத்துரைக்கின்றது.

'எனக்குவாரவரத்துல... மசானத்துச் சிதைநெருப்புல போயிசோறு பொங்கிரலாமான்னு வருதுமாரி வயிறு எக்கி ஏதி, கண்ணுகரிச்சுநாசமாப் போறன் அரைவவுத்துக் கஞ்சிக்கு இந்தப்பாடு. பொட்டைப் பொறப்பு நாய் விடசீரழிப்பாயிருச்சு" என்னும் பகுதி சுடுகாட்டையே வீடாகக் கருதி வாழும் சூழலை வெளிப்படுத்துகின்றது (Andal Priyadarshini,, 2005).

## பூப்படைதல்

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை இறந்த பின்பும்கூட பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுவதால், ஒவ்வொரு சடங்கின் பின்னணியிலும் ஏதேனும் ஒரு காரண காரியம் இருக்கத்தான் செய்கின்றது. சமுதாயமயமாக்கப்படும் மனிதன் தான் அடையும் ஒவ்வொரு பருவநிலைக்கு ஏற்பச் சடங்குகளைச் செய்து அதற்குரிய சமுதாயத் தகுதியினைப் பெறுகிறான். பெண் அவ்வாறு பெண் பூப்படைவதைப் பெருமைப்பட்டுப் போற்றும் சமுதாயமாக அமைந்துள்ளது. அவ்வாறு பெண் பூப்படைவது வளமைக் குறியீடாக சமுதாயத்தால் போற்றப்படுகிறது. பருவம் வந்த பெண் திருமணமாகிச் செல்லும் வீட்டில் சமைப்பதற்கும், மணமகனின் வீட்டிலுள்ளவர்களை அனுசரித்துச் செல்லும் பண்பினை வளர்த்தக் கொள்ளவும், வரதட்சணை கொடுப்பதற்கான பணத்தைச் சேகரிக்கும் நிகழ்வாகவே சடங்கு நிகழ்வுகள் தலித் மக்களின் வாழ்வில் மாறிப்போனது.

'சடங்குன்னு பத்திரிகை வச்சாலாவது. நாலு பேரு வரப்போக இருப்பாக இனிம ராணி கல்லாணத்துக்குப் பண்டபாத்திரம்னு சேக்கணுமே. சடங்கு கழிச்சாத்தான் ரெண்டு சருவச் சட்டிநாலு புடவைபத்து நூறு மொய்ப்பணம்னு வந்து சேரும். செலவுக்கு பயந்து திரட்டு சுத்தவேணாம்னா ஒன்னுமத்துத்தான் போவும்.. பெட்டைன்னாலே செலவாளித்தான்...சடங்கு விசேசம்னு ஒண்ணாடி ஒண்ணாவருந்தேன்" இவ்வாறு சடங்கு கழிக்கும் போது மாமன் சீர் என்று பொருட்கள் கொண்டுவருவர். அதனை வைத்து பெண்ணுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்று எண்ணுகின்றனர் (Andal Priyadarshini, 2005).

சடங்கானதும் காலையில் இரண்டு பச்சைமுட்டை, உளுந்தங்களி, வெல்லப்புட்டு ராணிக்குக் கொடுத்தனர். சடங்கு அன்று உடுத்தத் தேவையான உடையை மாரியம்மாவும் முனியம்மாவும் எடுத்துவந்தனர். இவ்வாறு மற்ற நாட்கள் உணவுக்காகப் போராடும் தலித் பெண்களுக்குப் பூப்படைந்த நேரத்தில் நல்ல சத்தான உணவுகளைக் கொடுப்பதனால் பெண் உடல் வலுப்பெறும் என்று முனியம்மா கூறுவதாக ஆசிரியர் பதிவுசெய்கிறார்.

## பெண்கல்வி இல்லாமை

கல்வி என்பது தலித் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கக் கூடியதாக அமையவில்லை. தலித் மக்களுக்குக் கல்வி என்பது இன்றும் எட்டாக் கனியாகவே உள்ளது. மனிதநேயம், வளரவேண்டுமெனில், மனம் பண்பட வேண்டும். மனம் பண்பட வேண்டுமானால், மனக்கட்டுப்பாடு அவசியம். மனக்கட்டுப்பாடு அறக்கருத்துக்களால் உருவாவதாகும். அக்காட்டுப்பாட்டினை உணர்த்தக்கூடிய கல்வியைப் பெற முடியாத சூழ்நிலையில் தலித் மக்கள் உள்ளனர்.

நாடு வாழ, சமுதாயம் வளர, பெண்களின்நிலைஉயரவேண்டும். மனைசிறக்க அமைதிதவழ, குழந்தைகள் அறிவுடன் திகழப் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும். காலங்கள் மாறினாலும் தலித் பெண்களின் நிலையில் முன்னேற்றம் தென்படவில்லை. பெண்களின் இழிநிலை கண்டு உள்ளம் குமுறி பாரதியார் பாருக்குப் புதுமைப் பெண்ணைப் படைத்துக் காட்டுகின்றார்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்

எட்டுமறிவினில் அணுக்கிங்கேபெண்

இளைப்பில்லைகாணென்று கும்மியடி”

என்று ஆவேசக் குரல் எழுப்பி ஆடவரைவிடப் பெண்கள் கல்வியில் சிறக்கவேண்டும் எனக்கூற விழைகின்றார்.

“ஏட்டையும் பெண்கள் தொடுவதுதீமையென்

றெண்ணியிருந்தவர்மாய்ந்துவிட்டார்

வீட்டுக்குள்ளேபெண்ணைப் பூட்டிவைப்போமென்ற

விந்தைமனிதர்தலைக விழ்ந்தார்”

என்று பெண்கள் படிப்பது பாவம் என்று சொன்ன பிறவிகளை விந்தை மனிதர் என்று அழைக்கிறார் பாரதியார். ஆனால், தலித் பெண்கள் அதிகமாக யாரும் படித்ததில்லை. படித்து விட்டாலும் அவளை இழிவுபடுத்த எண்ணுவர். ‘தகனம்’ நாவலில் சின்னப்பொண்ணு படிக்காமல் இருப்பதால்தான் மயானத்தில் பிணத்தை எரிக்கும் தொழில் செய்கின்றாள். அவளுடைய அம்மா கோவிந்தம்மா சாலையில் கூட்டும் தொழிலைச் செய்கிறாள், தனால் இரண்டு வேளை உணவு கூட உண்ணமுடியாத நிலையில் இருக்கின்றனர் (Meiyappan, 2006).

தலித் மக்களில் ஆண்களைவிட பெண்களே கல்வி கற்க அதிக தடையைச் சந்திக்கின்றனர். தகனம் நாவலில் ராணி என்ற தலித்பெண் பூப்படைவதால் பள்ளிக்கல்வி தடைபடுவதைக் காணலாம்.

“இனிமேநீ ஸ்கூலுக்குப் போவேணாம் ராணி. பொட்டப்புள்ளவூட்டோட இருந்து ஆக்கி எறக்கப்பாரு. நாளைக்கேகட்டினவன் ஊட்டுக்குப் போயிசோறாக்கப் பேய்முளி முளிச்சேன்னுவையி.. சம்பந்திக்காரி என்னைத்தான் சாடைபேசுவா…” (தகனம் .ப46). திருமணம் ஆன பிறகு தன் கணவர் வீட்டுக்குச் சமைத்தால் போதும் என்ற சூழ்நிலையில் தலித் பெண்கள் வாழ்வதை இந்நாவல் பிரதிபலிக்கின்றது.

## தொழில்

சின்னப்பொண்ணுவின் தந்தை கோவிந்தன் மயானத்தில் வெட்டியான் வேலைபார்த்து, புத்தி பேதலித்து காணாமல் போனதால் குடும்பத்திற்காக அத்தொழிலைத் தானும் தனது இரண்டு தங்கைகளும் சேர்ந்துபார்க்க ஆரம்பித்தனர். தந்தை இல்லாததால் தந்தையைப் போலமயானத்தில் பிணம் எரிக்கும் வேலையைச் செய்கிறாள். செய்யும் தொழிலேதெய்வம் என்பதற்கேற்ப இத்தொழிலைச் செய்தாள் சி;ன்னப்பொண்ணு.

“க்கும்…. உசிரோடருக்கிற மனுசங்களோட பொய்யி திருட்டுத்தனம்…. ஏமாத்து, களவாணித்தனம் இந்தநாத்தத்தைவிடவா, பொணம் நாறுது? செத்தவங்கல்லாம் சாமிக்குசமாம். பொய்யி,பொரட்டு எதுவுங்கிடையாது, பசிச்சவயத்துக்குசோறுதான் வேணும் நாத்தம் புடிச்சவேலைன்னுபசிக்காம இருக்குமா…?” (Andal Priyadarshini, 2005).

“பொட்டப்புள்ளக்கி எம்புட்டு நெஞ்சுரம் பாரு…. கடைசி ஊர்வலத்துலயே வரவிடாத பொம்புளைக இன்னிக்கி பொணம் எரிக்குதுண்ணே. உனக்கு அந்ததைரியம் வேணுண்ணே…” என்னும் வரிகளில் தலித் பெண்ணாக இருப்பதால் வேறுதொழில் செய்யாமல் மயானத்தில் பிணத்தை எரித்தும் புதைத்தும் சிலநேரங்களில் புதைத்த பிணத்தைத் தோண்டவும் செய்து வாழ்வதை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது (Andal Priyadarshini, 2005).

## பாதுகாப்பின்மை

பெண்ணடிமை ஒழிய வேண்டுமென்று பாரதி, பாரதிதாசன், தந்தை பெரியார் போன்ற சமூகநலவாதிகள் அறிவுருத்தி வந்தபோதும், ஆணாதிக்கச் சமுதாயம் அதனை பொருட்படுத்தாமல் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றது. பெண்ணிய இயக்கங்கள் இத்தகைய பிரச்சினைகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டி வந்தபோதிலும் பெண்களுக்கெதிரான பாலியன் வன்முறைகளும் ஒடுக்கு முறைகளும் குறைந்தபாடில்லை. சட்டங்களும் அரசியல்வாதிகளும் ,தனைப் பொருட்படுத்துவதில்லை. வசதிபடைத்த ஆண்கள் பாலியல் வன்முறையில் ஈடுபடுவது அதிகரித்து வருகின்றது. சில நேரங்களில் பாலியல் வன்முறையால் இறந்தோர்களை எரிப்பதற்காக வெட்டியானிடம் கொண்டுவருகின்றனர். அவர்களை எரிக்கவில்லையெனில் பிணம் எரித்துப் பிழைக்கும் தலித் மக்கள் அடி உதைக்கு ஆளாகின்றனர். பிணம் எரிக்கும் ஆண்களே இம்மாதிரியான பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்போது தலித் பெண்கள் இப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பொட்டிச்சியால் ராட்சசக்கும்பலைச் சமாளிக்க ஏலுமா? உருட்டுக் கட்டை, குண்டாந்தடி, சைக்கிள் செயினுன்னு வாரவுகளை என்ன பண்ண? எங்க உசிருக்கு என்னசார் ஜவாப்பு? ஏழை பாழைங்க உசிருன்னா அம்புட்டு சல்லிசாப் போச்சா?" என்னும் வரிகள் பிணம் எரித்துப் பிழைக்கும் தலித் பெண்களுக்கு ஏற்படும் பாதுகாப்பின்மையை எடுத்துக்காட்டுகின்றது (Andal Priyadarshini, 2005).

## தீண்டாமை

தீண்டாமை மனிதத் தன்மையற்றசெயல். அதைப் பின்பற்றுவோர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்என்று அரசு அறிக்கைவிடுத்தாலும் ,சட்டங்கள் இயற்றினாலும், சமுதாயத்தில் தீண்டாமை பரவிக் கிடக்கிறது.

தீண்டாமை நமது சமுதாயத்திற்கு ஒருகறை. நமது சமுதாயத்திற்கு ஒருசாபக்கேடு என்கிறார் குன்றக்குடி அடிகளார் (Kesavan, 1994).

"சாதிமுறையின் கொடியவடிவம் தான் தீண்டாமை. சாதியம் ,ருக்கும் வரைதீண்டாமை ,ருக்கும் என்கிறார் அம்பேத்கர்"

என்ன தான் பணக்காரனாகப் பிறந்தாலும் ,றுதியில் ஆறடி நிலம் மட்டுமே மிஞ்சுகிறது என்ற வாய்மொழிக்கேற்ப இந்நாவலில் ராசாத்தி என்ற பெண் தான் விரும்பிய ஆண்மகனை மணம் முடித்ததால் அவனாலேயே கொலை செய்யப்பட்டு புதைக்கப்படுகிறாள். புதைக்கப்பட்ட ராசாத்தியின் பிணத்தைத் தோண்டி எடுத்து பரிசோதனை செய்ய நினைக்கின்றனர். மயானத்தில்.புதைத்து சில நாட்கள் ஆன நிலையில் வெட்டியான்கள் யாரும்; முன்வராததால் சின்னப்பொண்ணு கொலையுண்ட பெண்ணின் பெற்றோர் படும். துயரைக் கண்டு பிணத்தைத் தோண்ட, பிணத்தில் புழுக்கள் மொய்க்கிறது. அந்நிலையில் அவளது பெற்றோர்களும் சுற்றியிருப்பவர்களும் அருவருப்புடன் ஒதுங்கும் நிலையில் சின்னப்பொண்ணு அப்பிணத்தைத் தூக்கி வண்டியில் வைக்கிறாள். ராசாத்தியின் பெற்றோர் கூலியாக ஐம்பதை ரூபாயைக் கொடுத்துச் செல்கின்றனர்.

"சமுதாயத்திலுள்ள வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சிக்கல்கள் மறைகின்ற பொழுதுதான் சாதியும் மறையும்". இவ்வாறு எந்தச் சாதியில் பிறந்தாலும் பிறக்கும்போது பார்க்கும் பார்வை வேறாகவும், இறந்த பின்பும் பார்க்கும் பார்வை வேறாகவும் இருக்கின்றதைத் தகனம் நாவல் சுட்டிக்காட்டுகின்றது.

## அடிமைமுறை

சமூகப் பிரச்சினையும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. பொருளாதாரப் பிரச்சினை என்பது எல்லா மக்களுக்கும் பொதுவானது. சமூகப் பிரச்சினை என்பது

குறிப்பிட்ட சிலபிரிவினருக்கு மட்டுமே உரியது. சமூகப் பிரச்சினைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் சாதிப் பிரச்சனை தலித்துகளுக்கே உரிய ஒன்றாகும். தீண்டாமை, அடிமைமுறை, ஆலயப் பிரவேசம் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகள் தலித்துகளைப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறவிடாமல் தடுக்கின்றன.

“கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்றும் கணவனே கண்கண்ட தெய்வம்” என்றும் அவனைத் தொழுதி வணங்கி அவனுக்குப் பணிவிடைகள் புரிந்துவாழும் நிலையில் தான் தலித் பெண்கள் இருக்கின்றனர் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூல் கூறுகின்றது. என்னும் பகுதிகள்; தலித் பெண்களை அனைத்து இடங்களிலும் அடிமையாகவே எண்ணும் உயர்சாதி மனப்பான்மையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன (Muthuchidambaram, 2005).

## தலித் போராட்டம்

தமக்குத் தாமே போராட வேண்டிய சூழலில் அமைப்புசாரா போராட்டம், அமைப்புசார்ந்த போராட்டம் என்ற இரண்டு நிலைகளில் தலித் மக்களி;ன் போராட்டம் ஆராயப்படுகின்றது. தங்களின் உரிமைகளைப் பெறுவதற்காகத் தாங்களே வருந்திப் போராட வேண்டிய நிலையில் தலித் பெண்கள் இருக்கின்றனர். தகனம் நாவலில் மழைபெய்து குடிசைகள் விழுந்தன. ஊரெல்லாம் சாக்கடையாகின. குடியிருக்க இடமில்லாமல் சத்துணவுக் கூடத்தில் தாழாங்குப்பம் மக்கள் அனைவரும் நுழைந்தனர். அதன்பின்பு மக்களைக் கவனிக்க ஆளில்லை.

'முதலில் குழம்பும் சோறும் வந்தது

ரெண்டுநாள் கழித்துரசமும் சோறும்

அப்பறம் வெறும் மொக்கைச் சோறு

ஐந்தாம் நாளேஅதுவும் நின்றுபோனது" இவ்வாறு ஆன பிறகும்தலித் மக்கள் போராட்டம் நடத்த அதற்குத் தலைமை தாங்கினாள் சின்னப்பொண்ணு.. போராட்டத்தில் தலித் ஆண்கள் இருக்கும் இடத்தில் தைரியமாகத் தலித் பெண் சின்னப்பொண்ணு போராடினாள்;. இருப்பினும் போராடிய தலித் மக்களுக்கு எழுபத்தைந்து ரூபாயைக் கொடுத்து அனைவரையும் வாயடைக்கச் செய்துவிட்டனர். தலித் பெண்களின் போராட்டம் முழுமையடையாமல் சூழ்ச்சியால் தடைபவதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

தலித் மக்களின் போராட்டம் தமிழ்ச் சமூகத்தை முழு அளவில் மாற்றுவதற்கான போராட்டமாக இருக்கிறது. ஆனாலும் வாழ்வில் அடிமட்டத்தில் வாழ்வுக்கான வசதிகள் மட்டுமில்லாமல், தன்மானம் முதலியவற்றை இழந்து ஒடுக்குமுறைகளுக்குத் தலித் சமூகம் உள்ளாகின்றனர். தலித் பெண்களுக்கு அனைத்து உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. எதிர்த்துப் பேசும் நிலையிலும் மக்கள் இல்லை இந்தநிலையில் தன் இனத்தவர்களாலும் தன்னைச் சுற்றியுள்ளபிற, னத்தவர்களாலும் தலித் பெண்கள் பல பிரச்சினைகளுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்நாவலில் தலித் பெண்களுக்குக் கல்வி இல்லாமை, வாழ்விடம் சுகாரதாரமாக இல்லாமை, உணவு இல்லாமை, காதலும் கைகூடாதநிலை, திருமணம் அமையாதநிலை, தீண்டாமை, மழை வெயிலென்று பாராது கடினமாக உழைத்தாலும் சம்பளம் இல்லாமை, தீட்டுநாட்களிலும் உழைக்கும் தலித் பெண்ணின் நிலை, மயானத்தில் வெட்டியான் வேலைபார்க்கும் நிலை, சாலைகளைச் சுத்தம் செய்யும் போது ஏற்படும் நிலை என பல பிரச்சினைகளைத் தகனம் நாவல் படம் பிடித்துக் காட்டுகின்றன. வேலையில்லாத் திண்டாட்ட நிலையில் தலித் பெண் குடும்பத்திற்காகத் தன் காதல், சுயமரியாதை அனைத்தையும் ,ழந்து வாழும் கொடுமையை ஆசிரியர், இந்நாவல் மூலம் பதிவு செய்துள்ளார்.

## References

Andal Priyadarshini, (2005) Thaganam, New Century Book House, Chennai, India.

Idhayaventhan, Vizhi Pa., (2002) Dalit Azhagiyal, Kaavya Pathippagam, Chennai, India.

Kesavan, Ko., (1994) Samuga veduthalaiyum thalthapattaoorum, Saravanabalu Pathippagam, Viluppuram, India.

Meiyappan, Sa., (2006) Bharathiyar Kavithaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Muthuchidambaram, Sa., (2005) Penniyam Thotramum Valarchiyum, Muthu Pathippagam, Viluppuram, India.

Natarajan, T.S., (2012) Thiranaivukalai, New Century Book House, Chennai, India.

Raj Gauthaman, (2018) Dalit Panpadu, Adaiyalam Pathippagam, Tirchy, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License